பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

நபிநாயகமவர்களுக்குத்

# திருமுடியிறக்கின ஹதீது.

இது

நூறுநாமா முதலிய

கிதாபுகளில் நோட்டமிட்டு

காயற்பட்டணம்

கண்ணகுமது மகுதூம் முஹம்மது

புலவரவர்களால் பரிசோதித்த

பிரதிக்கிணங்க,

---

சென்னை திருவல்லிக்கேணி;

மொ. அ. ஷாஹுல்ஹமீது லெப்பை

அவர்களாற் றமது

ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திரசாலையில்

...ப்பிக்கப்பட்டது.

---

22. [அணா 2.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

நபிநாயக முஹம்மது சல்லல்லாஹு
அலைஹிவசல்லமவர்களுக்குத்

# திருமுடியிறக்கின ஹதீது.

## பாயிரம்.

அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன், வல்ஆக்கிபத்து லில்முத்தக்கீன், வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா றசூலிஹி, சையிதினா முஹம்மதின், வஆலிஹி வஸஹ்பிஹி அஜ்மயீன்.

---

## இன்னிசை.

பத்தோ டிருநான் பார்முதல் எவ்வகையும்
பத்தா படைக்குதற் பகருமவன் றன்னொளியான்
முத்தாகவே படைத்த முஹம்மது றசூல்நபிக்குச்
சுத்தா முடியிறக்குந் திருவசனஞ் சொல்வோமே.

---

வசனம்.

இ[illegible] பதினெண்ணாயிரம் ஆலங்களையும், அவ்வாலத்தி[illegible]ங்கிய எறும்பு முதல் யானை மிருகவுள்ள எண்பத்[illegible]ன்குநூறாயிரம் ஜீவஜெந்துக்களைப்படைத்து, அவ்வவைகள் தராதரப்படிக்குரிசுக்கென்னும் புசிப்பீந்து பாதுகாத்து ரட்சித்துத் தன்னாலனுப்பப்பட்[illegible] [illegible]ம்று நஹீயாகிய வேதத்திலடங்கிய கட்டளை பி[illegible]காரம்ஏவலேஎடுத்திச்செய்பவர்கள்பேரில் இம்மை மறுமையென்னு மிரண்டுலகத்திலும், சந்தோஷமாகவும், விலக்கல்களை விரும்பிச் செய்பவர்கள்பேரில் வெறுப்பாகவும், அரசாக்கினைசெலுத்தியாளுகின்ற வல்லுகாரணனாகிய அல்லாஹு தஆலாவென்னும் கடவுள் படைத்த சகல படைப்புகட்கு மேலான ஜன்மங்களுக்கு முதன்மையராகப்படைக்கப்பட்ட தூதர்களான இலட்சத்திருபத்து நான்காயிரம் நபிகளென்னுந் தீர்க்க தரிசிகளுக்கு முதன்மையரான தீர்க்க தரிசிகள், மூந்நூற்றுப்பதின்மூன்று முருசலீன்கள், அவர்களுக்கு முதன்மையரான தீர்க்க தரிசிகள், ஆறுஉலுல் அசுமிகள், அவர்களுக்கு நாயகமான நபி முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்களுக்குத் திருமுடியிறக்கின ஹதீதாயிருக்கும்.

இந்த ஹதீதை முஃமீன் முசிலீமான உடற்பிறந்தான்மார்கள் யாவரும் வள்ளலாகிய நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களுடைய வரிசையான திருநாமம்வருந்தோறும் சலவாத்துச் சொன்னவர்களாகக் கேட்பீரானால் அதனாலே உங்களுக்குக் கிடைக்கிற வரிசைகளையும் தறஜாத்துகளையும் நன்மைகளையும் பெருமைப்பேறுகளையும் இன்பங்களையும் மனமகிழ்ச்சிகளையும் லாப சந்தோஷங்களையும் மட்டில்லாமல்பெற்று அல்லாஹு தஆலாவுடைய முஹப்பத்திலாகி ஆனந்தபாஸ்கர முற்றிருக்கும்பொருட்டுச் சுருக்கமாக நூறுநாமாமுதலிய கித்தாபுகளில் எழுதியிருக்கிற சரித்திரங்களைத் தெரிந்து பொறுக்கி எடுத்து எளிதில் விளங்கும் தமிழ்நடை வசனமாக ஏழையி லேழையான இவ்வடியா னெழுதலாயினன். நம் மனோவோர்களுடைய பிழைகளையும் பொறுக்கத்தக்கதாகிறவன் பொறுத்துக்கொள்வானாகவும். ஆமீன் ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

இங்ஙனம்:

**கண்ணகுமது மகுதூம் முஹம்மது புலவர்,**

புத்தக பரிபாலனத்தலைவர். சென்னை.

## சரித்திர வசனம்.

அல்ஹம்து லில்லாஹி எல்லாப் புகழும் புகழ்ச்சியும் அல்லாஹு தஆலாவுக்காக இருக்கும். ஒரு போது அல்லாஹு தஆலா வானவர்களுக்கு அரசராகிய ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்களை யழைத்து, அவர்களோடும் என்னுடைய வஹியைநானுவந்த அடியார்களுக்கு எற்றிவிக்குந் தன்மையையுடைய ஜிபுரீலே, நீரிப்போது என்னுடையவரிசைபேரிலே முந்தினவராகியும், பதினெண்ணாயிரம் ஆலத்திற்கும் நாயகராகியும், இலட்சத்திருபத்துநான்காயிரம் சின்ன நபிகளான தீர்க்கதரிசிகளுக்கும், முந்நூற்றுப் பதின்மூன்று முறுசலீனென்னும் பெரிய நபிகளான் தீர்க்கதரிசிகளுக்கும். தாஜுல் அன்பியாவென்னும் கிரீடாதிபதியராகியும், என் ஆசைக் கடலிற் றிரண்டெழுந்த முத்தாகியும், என் இன்பம் பொருந்திய ஹபீபென்னும் தோழமையாகியும், உயிர் பிணங்கள் சகலவைபேரிலுங்கிருபையுடையவராகியும், அறுஷு,குறுசு, சொர்க்கம் முதலிய எவ்விடங்களிலும் ஸ்தாபிக்கப்பட்ட பெயரையுடையவராகியும் விளங்கும் முஹம்மது முஸ்தபா றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லத்தி

ற்கு அருஷளாகிய சிரசிலிருக்கும் திருமுடியை யிற க்கிவாருமென்று திருவுளமானுன்.

அதுகேட்டு ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மவர்கள் அல்லாஹு சுபுஹானஹு தஆலாவை மிகவும் முரு குதலாகப் புகழ்ந்துபோற்றி யாறப்பியாகுதா யாபா றக்கு யாஅல்லா உன்னுடைய திருத்தோழராகிய செய்யிதுல் கௌனைன் செய்யிதுல் முறுசலீன் தா ஜுல் அன்பியா முஹம்மது முஸ்தபா றசூல் சல்லல் லாஹு அலைஹிவஸல்ல மவர்களுக்குத் திருமுடியை யிறக்குகிறதற்கு எவ்விதமாக நான் போகிறதென்று கேட்டார்கள்.

அதற்குஅல்லாஹுசுபுஹானஹுவதஆலாஜிபு ரீல் அலைஹிஸ்ஸலாமவர்களோடு என்னுடைய உள்ள மையை நீங்காத வரிசைதங்கிய ஹபீபாகிய முஹம் மதுநபிக்குத் திருமுடியிறக்க என்கிருபைதங்கியசொ ர்க்க லோகத்திலே நீர் போய் அங்கே யோடுகின்ற நான்குஆற்றிலும்தெளிவோடும் வாசனைமிகுந்த ஹவ லுல் கவுதருத்தில் நின்றும் தண்ணீரும், முத்தலக் கென்ற கத்தியும், வாஜிபென்கிற சுந்துசுப்பட்டும், பயக்கூனென்கிற எண்ணெயும், கொறுக்கானென்கிற

பச்சை மரகதக்கல்லும், கமலக்கா ளென்கிற தெளி வான கண்ணாடியும் வெகு ரம்மியமாக வெடுத்துக் கொண்டுபோய் என்னுடைய கிருபைதங்கிய ஹபீபா கிய முஹம்மது நபிக்குத் திருமுடியை யிறக்கி வாரு மென்று திருவுளமானன்.

இவ்விதம் அல்லாஹுௗ சுபுஹானஹுௗ வதஆலா ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாமவர்களுடனே சொல்லுஞ் சொற்களனைத்தையும் ஏழு வானலோகத் திலும், அறுசு, குருசு முதலாகிய இடங்களிலும் நிரம் பியிருக்கின்ற மலாயிக்கத்துக ளென்னும் தேவர்கள் கேட்டு,உடனே அல்லாஹுௗ சுபுஹானஹுௗ வதஆலா வைப்போற்றிப் புகழ்ந்து அவனோடும் யாறப்பியாகு தாயே, உன்னுடையகிருபைதங்கிய ஹபீபாகிச் சகல புவன ரட்சக தயாளசம்பன்னனைக் கெம்பீர சாசுவத சைதன்னியரான செய்யிதுல் அன்பியா முஹம்மது அஹ்மது ஹாமிது முஸ்தபா சல்லல்லாஹுௗ அலைஹி வசல்ல மவர்களுடைய திருச்சிரோருகங்களை உக்கிற பெருமைத் தன்மையை நாங்க ளறிந்தோ மாதலால் அந்தத் திருச்சிரோருகத்தில்நின்றுங் கொஞ்ச வடை யாளம் எங்களுக்குங் கிடைத்தா லதனலே நாங்கள்

எந்த மிகவுஞ் சங்கையை யடைவோ மென்று மகா விருப்பத்துடனே கேட்டார்கள்.

அப்போது அல்லாஹு சுபுஹானஹுவதஆலா அந்த மலாயிக்கத்துகளைப்பார்த்து என்னுடையமலா யிக்கத்துகளே, நான் படைத்திருக்கிற பூமியிலுண் டான மணல்களித்தனையென்றும், நானிறக்கி வைக் கிற மழைத்துளிகளித்தனையென்றும், நானுண்டாக் கிய மரமட்டைகள் அவைகளி லுண்டான கொப்பு குழை தழைகளித்தனையென்றும், நான்செய்தவான த்திலுள்ள நட்சத்திரங்களித்தனை யென்றும், எழுக டல் நீரையும் படியினாலளந்து இத்தனைபடி யென்றும் கணக்கிட்டாலும் என்னுடைய குதறத்தினாற் படை க்கப்பட்ட மலாயிக்கத்துக்களான நீங்கள் இவ்வள வென்று கணக்கிடக்கூடாத கூட்டமாக இருக்கிறீர் கள். ஆதலால், என்னுடைய கிருபை பொருந்திய ஹபீபான முஹம்மது நபியுடைய திருச்சிரோருக த்தை நீங்கள் கிடைக்கப் பெற்றால் எவ்விதமான கவ னங்கொண்டு பேணுவீர்களென்று கேட்டான்.

அப்போது மலாயிக்கத்துகள் அல்லாஹு சுபு ஹானஹுவதஆலாவைப் போற்றிப்புகழ்ந்து யாற

ப்பியாகுதாவே உன்னுடைய ஆசையென்னுங்கடலில் ஓர் முத்தா யுதித்தெழுந்து உன்னுடைய கிருபைப் பார்வைக்கு முன்னிலே தரிபாடாகிப் பஞ்சவர்ண பட்சியாகி உன்னுடையதிருச்சமுகத்தில் வீற்றிருந்து விளையாட்டம்புரிந்த நபிமுஹம்மது முஸ்தபா ஸல்ல ல்லாஹு அலைஹிவசல்லமவர்களுடைய திருச்சிரோ ருகத்தினடையாளங் கேட்கவேணுடுமென்று நாங்கள் அனேககாலமாக நீங்காத ஆசையோடு துஆக் கேட் டுக்கொண்டிருக்கிறோம், அப்படியிருக்கின்ற நாங்கள் அத் திருச்சிரோருகத்தை எவ்விதம் பேணவேண்டு மோ அவ்விதம்பேணுவோமென்று சொன்னார்கள்.

அதுகேட்டு அல்லாஹு சுபுஹானஹுவதஆலா அந்த மலாயிக்கத்துகளைப்பார்த்து, ஆ என்னுடைய மலாயிக்கத்துகளே நீங்கள் கேளுங்கள், என்னுடைய திருத்தூதராகிய முஹம்மது நபியுடைய திருமுடியிற சிகினஹதிதை யாதாமொருவன்பயபக்தியுடனே மிக வும்பேணுதலாக எழுதி வெள்ளிக்கிழமை திங்கட்கிழ மையாகியஇந்நாட்களில் அந்தப்புத்தகத்திற்குப்புகர் வாசனைகாட்டிப் படித்து முஹப்பத்தாகி வைப்பானு

கில் அவனுடைய வீட்டிலே நெருப்பண்டமாட்டாது. இன்னும் அவனுடைய கபுறில் முன்கர் நகீருடைய கேள்விகளையும், இலேசாக்கிவைப்பேனென்றும் திருவுளமானான்.

இன்னும் யாதாமொருவன் என்னுடைய திருஒளிவினாலமைக்கப்பெற்ற முஹம்மது நபியுடைய திருமுடியிறக்கிய வரிசையான ஹதீதை மன அச்சங்கொண்டு பேணுதலாகஎழுதி நாட்கள்தோறும் வாசனையிட்டுப் பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டு பீஸபீலுக்குப்போவானாகில் பீஸபீலிடத்தில் ஆயுதங்களினால் நடக்கின்ற வெட்டு, குத்து, அடி, தடி முதலாகிய செய்கையைக் கொண்டும், அவனைக் காப்பாற்றி அவனுடைய மேனியிலே காயம் முதலாகிய பழுதுபடாமற் காப்பாற்றுவேனென்றும் திருவுளமானான்.

இன்னும் யாதாமொருவன் என்னுடைய முஹப்பத்தில் முந்தினவரான முஹம்மது நபியுடைய திருமுடியிறக்கிய மேலான ஹதீதினுடைய உள்ள கம்பப்பொருளையறிந்து மனநேசமாக வெள்ளிக்கிழமைதிங்

கட்கிழமையாகிய நாட்களிலே திசிகரமாகவைத்துப் படிப்பவர்களுக்கும், அப்படிப் படிப்பதைக் கூர்மை யான பூணிப்புடனே கேட்டுச் சலவாத்து சொன்ன வர்கட்கும், அன்பு கூர்ந்து படிக்கச் சொன்னவர்கட் கும் என்னுடைய ஹபீபு முஹம்மது நபி மிஃறாஜிக்கு வந்து அறுஷிலேறி என்னை முகக்கண்ணாலே கண்டு வணங்கும்போது அவருக்குக் கொடுத்த வரிசைகள் போலுள்ள வரிசைகளைக் கொடுப்பேனென்றுந் திரு வுளமானன்.

இன்னும்யாதாமொருவன் என்னுடையறஹ்மத் துக்குமுதன்மையாகிய றஹ்மானிய்யாவென்னும் நப் சைத்தெரிந்து நாயகத்தன்மைபெற்ற முஹம்மது மு ஸ்தபாவுடைய திருமுடியிறக்கின ஹதீதைப் பொய் யென்று நினைத்து ஓதாமலிருந்தாலும், சலவாத்துச் சொல்லாமலிருந்தாலும், அந்தஅடியானென்னுடைய அறுஷையும் குறுசையுமிடித்த பெரும் பாவியாகப் போகிறதுடனே என்னுடையதீதாறும், என்தோழர் முஹம்மது நபியுடைய ஷபாஅத்தும் அவனுக்குக் கிடைக்கமாட்டாதென்றுந் திருவுளமானன்.

இன்னும் யாதாமொருவன் என்னுடைய வலுப்பத்தில் முந்தினவரான மஹ்பூபு முகம்மதுநபியுடைய திருமுடியிறக்கின ஹதீதை மேற்சொன்ன முறையாகச்சங்கையோடும் வரிசையோடுந் துப்புரவாக எழுதிவைத்தாலும், எழுதிவைக்கச் செய்தாலும், படித்தாலும், படிக்கக் கேட்டு சலவாத்துச் சொல்லிக்கொண்டிருந்தாலும், படிக்கக்கேட்க நாட்டம் வைத்தாலும், மஹப்பத் துள்ளவனுகவு மிருக்கிற துடனே அவனுடைய வுள்ளமையை யறிந்தவனுகவும், எனக்கு மிகவும் மஹப்பத்துள்ளவனுகவு மிருக்கிறதுடனே அவனுடைய கல்பென்னு மனத்தைத்தெளிந்த கண்ணுடியாக்கிவைத்து அவனுடைய தேட்டம் நாட்டங்களை நான் நிறைவேற்றிக் கொடுப்பே னென்றுந் திருவுளமானன்.

இன்னும் யாதாமொருவன் என்னுடைய திருவொளியில்நின்று முத்தாவதாரமானமுஹம்மது நபியுடையதிருமுடியிறக்கினஹதீதை நிசமென்றெண்ணி வரிசையான உவப்போடும் ஒதிவந்தாலும், எழுதிவைத்தாலும், ஓதும்போது கிருபையாகக் கேட்டிருந்து சலவாத்துச் சொன்னுலும், அவ்வடியானுக்குத்

துன்யாவில் 7-காரியங்களை வெளியாக்கிக் கொடுப்பேன். அக்காரியங்களில்:—

1-வது குறுஆன் முப்பது ஐூசுவையும் மனப்பாடமாக்கிக்கொள்ளுந்திராணியையும், 2-வது பவுத்திரனுடைய சம்பவிப்புண்டாகுந் திராணியையும், 3-வது ஹறபாத்து நீடிக்கும்படியான திராணியையும், 4-வது கபுறுடைய அதாபைவிட்டும் நீங்கிஇறுஹத்துப் பெறும்படியான திராணியையும், 5-வது ஏழுநரகங்களையும்ஹறுமாக்கி எட்டுச்சுவர்க்கத்துடைய வாயில்களையுந் திறக்கச் செய்து அவன் கபுறுக்கு நேராகக் காட்டும்படியான திராணியையும், 6-வது துன்யாவில் வந்தெதிர்க்கப்பட்ட தங்கடங்கள், மனவருத்தங்கள் நீங்கும்படியான திராணியையும், 7-வது கியாமநாளையில் அவ்வடியானைக் கபுறறையை விட்டும் எழும்பும்போது அவனுடையமுகத்தைப்பதினாலாநாளில் உதயமாகுகிற பூரணச்சந்திரனொளியாகும்படியான திராணியையும் வெளியாக்கிக் கொடுப்பேன்.

இன்னும் அவ்வடியானைத் தறுசுஎன்கிற பட்டாடையு முடுத்தச் செய்து லாசிபென்னும் குதிரையின்

பேரிலுமேற்றிவித்து முத்து வெண்மாணிக்கத்தினற் செய்யப்பட்ட குடையும் பிடிக்கச்செய்து ஹவுலுல்க் கவுதரென்கிற ஆற்றினீரிலு முழுகச் செய்து சிதுறத் துல் முன்தஹாவென்னும் மரத்தினுடைய இலையைத் தொப்பியாக்கி அதில்ஷரீஅத்தென்னு மாணிக்கமும், விக்கிலாவென்னுந் தண்ணுடியு மொழுங்காகப் பதிப் பித்து விளங்கும் அத்தொப்பியையுந் தலையிற் போடு விப்பேனென்றுந் திருவுளமானுன்.

இன்னும் யாதாமொருவன் என்னுடையதோழ ராகிய ஷபீபுல்முஸ்லிமீன்முஹம்மதுநபியுடையதிரு முடியிறக்கின மேலான ஹதீதை முஹப்பத்தாகவும் கிருபையாகவும் துப்புரவோடு மனமகிழ்ச்சியாகவோ துவதைக் காபிரீன்கேட்டு மனமும் வாக்குப்பொருத் தமாகித் தீனில் இசுலாமார்க்கத்தில் வந்தார்களாகில் உடனேயவர்களுக்குச் சுவர்க்கபதவியைக் கற்பித்திடு வேனென்றுந் திருவுளமானுன்.

இன்னும்யாதாமொருவன் என்பிரியமுள்ள ஹபீபான காத்திமுன் னபிய்யீன் முஹம்மது நபியுடைய திருமுடியிறக்கின ஹதீதை பயபக்தியுடனே வரிசையாக எழுதிப் பேணுதலுடனே வைத்துக் கொண்டு சுல்தான்கள் இராஜாக்களுடைய சபையை நாடிப் போய் அவர்களுக்கு வலதுபுறமாக நின்று கொண்டு பேசுவானாகில் அவன் நாடிப்போன காரியங்களையெல்லாம் குறைவு படாமல் முடிவுபெறும். வெற்றியையுங் கொடுப்பேனென்றுந் திருவுளமானன்.

இன்னும் யாதாமொருவன் என்னுடைய அன்புள்ள தூதராகிய செய்யிதுல் முறுசலீன் முஹம்மது நபியுடைய திருமுடியிறக்கின வரிசையான ஹதீதைப் பேணுதலாகஎழுதிவைத்துக்கொண்டு கடலின்பேரிற் பயணமாகிக் கப்பலிலேறிப் போகும்போது அக்கடலிற் கடற்காற்றுப் புசல் முதலாகிய தங்கடத்தினாற் கப்பல் ஹலாக்காகுந் தன்மையைத் தெரிந்தால் உடனே தானவது அந்தஹதீதைப் படித்தானென்றாலுஞ் சரியே, அல்லதுபடிக்கத்தெரிந்தவர்களிடத்திற் கொடுத்துப் படிக்கச்சொல்லிக் கேட்டிருந்து சலவாத்துச்

சொல்லுவேனென்றாலுஞ் சரியே, கவிழ்ந்துபோகிற கப்பலேயும் உடனே காப்பாற்றி கலாசாக்கிக் கரை சேர்த்து விடுவேனென்றுந் திருவுளமானன்.

இன்னும் யாதாமொருவன் என்னுடைய வரிசையான முஹம்மது நபியுடைய திருமுடியிறக்கின ஹதீதை எழுதிப் பேணுதலாக வைத்துக்கொண்டு காட்டு வழியிற் போவானுகில் அந்தவழியிற் பாம்புகள் கிடந்து இவனுக்குத் தெரியாமற் கடிக்கவந்தாலும் அப் பாம்புகளின் கண்கெட்டு அவிழ்ந்து குருடாகப்போகுமென்றுந் திருவுளமானன்.

இன்னும் அல்லாஹு சுபுஹானஹூத் தஆலா என்னுடைய உண்மைத் தூதராகிய முஹம்மது நபியுடைய திருமுடியிறக்கின ஹதீதை யாதாமொருவன் பேணுதலாக எழுதி வைத்துக்கொண்டு அதை வெள்ளிக்கிழமை, திங்கட்கிழமை இரவுகள்தோறும் குளித்து உலூச்செய்துகொண்டு துப்புறவாக இருந்து படித்தானுகில், அவனுக்கும் படிக்கக்கேட்டுச் சலவாத்துச்சொல்லிகொண்டிருந்த பேர்கட்கும் துணையாக அவர்கள் துன்யாவில் ஹயாத்துடனே யிருந்து வாழ்

நாள்தோறும் நாளொன்றிற்கு எழுபதினாயிரம் மலாயிக்கத்துகளை அனுப்பிப் பாதுகாக்கச் செய்விப்பேனென்றுந்திருவுளமானான்.

இன்னும் அல்லாஹு சுபுஹானஹூத் தஆலா என்னுடைய விரிவான வரிசைக்குரித்தாகிய செய்யிதுல் அன்பியாமுஹம்மது நபியுடைய திருமுடியிறக்கின ஹதீதை யாதாமொருவன் உவப்புக் கொண்டெழுதிப் படித்துவந்தா லவனுக்கும், அப்படிப் படிப்பதைக்கேட்டுச் சலவாத்துச் சொல்லிக்கொண்டிருப்பவர்கட்கும் ஷரீஅத்தென்ற மரத்துக்கனியைக் கொடுத்துமிருந்த நேர்த்தி செய்வேனென்றுந் திருவுளமானான்.

இவ்விதம் அல்லாஹு சுபுஹானஹூத் தஆலா முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய திருமுடியிறக்கின வரிசையையும், பெருமையையும் பெரிதாகச் சொல்லக்கேட்ட மலாயிக்கத்துமார்களெல்லோரும் மிகவும் மனமகிழ்ந்து உடல்பூரித்துஉரோமம் புளகாகிதங்கொண்டு ஆண்டவனைப் போற்றிபுகழ்ந்து எங்களுடைய ஆண்டவனே! வல்லமைக்கெல்லாம்வல்லமையானவனே, படைப்பினங

களுடையஎண்ணத்தை அறிந்தவனே அடக்கி அதா லத்துச்செய்பவனே. தன்னையன்றித் துணைக்கோ ரிணை துணை யில்லாதவனே, ஆண், பெண் அலியில்லா தவனே, ஊணுறக்கமில்லாதவனே, எங்களாசை நிறைவேறும் பொட்டு ஒளியாகிய தெளிவாகிய உண்மையாகிய நன்மையாகிய வள்ளலாகிய குருவா கிய காரணக்கடவுள். காத்திமுல் லன்பியா முஹம் மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர் களுடைய திருச்சிரோருகத்திற்குஞ்சித மெங்களுக் குக் கிடைத்தால் அதனை மிகுந்த பயபக்தியுடனே பூணிப்பான பேணுதலுனே தசுபீஹ் செய்துகொண் டிருப்போமென்று கேட்டார்கள்.

## ரிவாயத்து.

ஒருபோது பூமிக்கு நடுத்தலமாகிய மக்கமா நக ரத்தில் நடுநாயகமாக எக்குற்றமுமில்லாத ஹக்குத் தஆலாவுடைய அருளினல் நாளொன்றுக்கு எழுபதி னுயிரம் மலாயிக்கத்துகளிறங்கிப் பிரதக்கணம்வரு கின்ற கஃபத்துல்லாவினிடத்தில் துப்புறவாகிய நம் நாயகம் நபிமுஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவச ல்லமவர்களுக்குத்திருமுடியிறக்கின இந்த ஹதீதை சில் அசுஹாபிமார்கள் வைத்து ஓதிக்கொண்டிருக் கும்போது செய்கிசுமாயீலிபுனு சேய்குத்தென்கிற பெயர்விட்டழைக்கும் அசுஹாபியானவருடைய வீடு நெருப்புப்பற்றி எரியக்கண்டு சகலரும் வருத்தம டைந்து அவ்வீட்டருகிற்சென்று நெருப்பினுடைய அதிகரிப்பின் காங்கையினுற் கிட்டமுடிகப் பயந்து நிற்கும்போது சுகுபாவிலிருந்தவர்கள் கேள்விப்ப ட்டுவந்து இந்த ஹதீதையோதி சலவாத்துச்சொல்லி அந்த நெருப்பெரிகிறவீட்டின்பேரில் ஊதினர்கள். உடனே நெருப்பு அமர்ந்து போய்விட்டது.

ஆகையினால் மூமீன் முஸ்லிமாகிய உடற்பிறந்தான் மார்களே! இப்பேர்கொத்த காரணங்களையும் புகழ்ச்சியையுடைய இந்த ஹதீதை நாமும் பயபக்தியுடனே மிகுந்த துப்புரவாகப்பேணி வைத்துக்கொண்டுபடித்து வருவோமானால் அல்லாஹு சுபுஹானஹுத்தஆலா வள்ளலாகிய வருசையாகிய நம்மாண்டகை நபிமுஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் பொருட்டிலே துனியாவில் வருகின்ற கங்கடங்களையும் நீக்கி இபுலீசு லஃனத்துல்லாவுடைய கலக்குதலாகிய பொல்லாங்குகளை நீக்கித் துன்பந் துயரங்களையுப் நீக்கி இன்பமானபுத்திர பவுத்திர சம்பன்னராக நீடித்து ஆபிசுடனேவாழ்வித்து முடிவு நாளையில் லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுற் றசூலுல்லாஹி என்னுங் கலிமாவுடனே கரைசேர்த்து கபுறையும் நெருக்கமில்லாமல் விஸ்தீரணமாக்கி வைத்து முன்கற் நக்கீருடைய கேள்விகளையும்இலேசாக்கிவைத்து ஹவுலுல் கவுதறென்னும் ஆற்றங்கரையோரத்தில் நபிநாயகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களுக்கு அசல்பாகமாகஇருத்தாட்டிவைத்து மஹுஷர் நாளையில் அக்கினிசுவாலையாகப் பூமி சுடும்போது லிவாவுல் ஹம்

தென்கிறகொடி நிழலை நிற்க இருக்கத்தந்து அல்லா ஹுத் தஆலா தான்கேட்குங் கேள்விகளையு மிலே சாக்கி நன்மைதீமைநிறுக்கிற மீசான் தராசில் நன்மைதட்டுக் கனதியுந்தீமைதட்டு இலேசுமாக்கி நன்மையேட்டை வலது கையிற்றந்து முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களுடைய திருமணக் கல்யாணக் காட்சியுங் காணச்செய்து அவர்கள் நூனென்கிற ஒரு மீன்சினையினாலே உம்மத்தோர்கட்கெல்லாம் விருந்தும் உண்ணச்செய்து முன்னூறு வருடத்தடிபாடும் கீழே நெருப்பாறு முடையதாய் வாளிலுங் கூர்மையாய் நூலிழைபோலே மிகவும் மெல்லியதாயிருக்கும். சிறாத்தல் முஸ்தகீமென்கிற பாலத்தையும், ஒரு மூச்சிற் கடந்து அக்கறைபோகுஞ் சக்தியையுந் தந்து நபி முஹம்மதுஸல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் கொடுங்கைப்பிடித்துப் பிருதவ் சென்ற சுவர்க்கம் புகுதவுஞ் செய்வானாக வீம். ஆமீன் ஆமீன் றாறப்பல் ஆலமீன்.

---

# ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் நபிநாயகத்துக்குத் திருமுடியிறக்க வருதல்.

ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் அல்லாஹுத் தஆலாவுடைய ஏவலின் பிரகாரம் சுவர்க்கலோகத்திற்குப்புகுந்து முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுக்குத் திருமுடியிறக்குவதற்கு வேண்டியவஸ்துக்களையெல்லா மெடுத்துக்கொண்டு றபீஉல் அவ்வல் மாதம் பனிரண்டாந்தேதி திங்கட்கிழமைய தினம்மக்கமா நகரத்தி லிறக்கினர்கள். அப்போதங்கே நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் நாலியார்களும், நாற்பத்திராயிர மசுஹாபிமார்களும் சூழ்ந்திருக்கத் தாங்கள் கற்பூரவாடை கமழும்பொற்பாகிய திருவாயைத்திறந்து ஹதீது கவுலுகள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

அப்போது ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் நபிநாயகத்தி ன்ருகிற்சென்று யா முஹம்மதே! அஸ்ஸ

லாமு அலைக்கும். உங்களுக்கு அல்லாஹு சுபுஹான ஹுத் தஆலாவுடைய ஸலாமுண்டாவதாகவும். இன்றையதினம் உங்களுக்குத் திருமுடியிறக்கிவரும்படிக்கு அல்லாஹுத் தஆலாஉத்தரவு செய்தானென்று சொன்னார்கள். அதுகேட்டு நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் மிகுந்த சந்தோஷமாகி 7-திரை கட்டுவித்தார்கள். அத்தருணத்தில் 1-வது ஷரீஅத்தென்னுந்திரை, 2-வது தரீக்கத்தென்னுந்திரை 3-வது ஹகீகத்வென்னுந்திரை. 4-வது மஃரிபத்தென்னுந் திரை, 5-வது லாகூத்தென்னுந்திரை, 6-வது அகமியமென்னுந் திரை, 7-வது ஒளியென்னுந்திரை.

ஆகிய இத்திரைகளேழும் வளைத்தான பின்னர் வெள்ளாகிய தெளிவாகிய ஒளிவாகிய முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுக்குத்திருச்சிரோருகங்களை இரக்க ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் அந்தத்திரைக்குள் நெருங்கும்போது வானம், பூமி, அறுசு, குறுசு முதலான இடங்களிற் கூட்டங் கூட்டமாக இருக்கிற மலாயிக்கத்துமார்கள் அனைவோரும் ஒன்றுபோலே மகா மனமகிழ்ச்சிகொண்டு எழுந்தருளியாகி நிறைநிறை

யாகநின்று அவரவர்களுடைய கைகளை மார்புக்கு நேராக யுயர்த்தி அல்லாஹுத்த ஆலாவிடத்திலே துஆக்கேட்டு நின்றூர்கள்.

அந்நேரத்தில் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மவர்கள் தமது திருக்சிறகினுல் நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுடைய அழகாகிய சிரஸைப் பிஸ்மிலோதிக்கொட்டு, முதலாவது சுவர்க்கத்துப் பனிநீர்கொண்டு தெளித்து, இரண்டாவது சலவாத்துக்கொண்டு துடைத்து, மூன்றுவது கஸ்தூரிகொண்டு திருமுடியைத்தடவி, நாலாவது விக்கிலாவென்னுங் கத்திகொண்டு தஸ்மில்லா ஹிர்றஹ்மானிர்றஹீம் என்று சொல்லி ஆண்டவனுடைய ஹபீபாகிய நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லத்தின் திருச்சிரோருகத்தை யிறக்கினூர்கள்.

இவ்விதம் ஜிரீபுல் அலைஹிஸ்ஸலாமவர்கள் நபிநாயகத்திற்கு இறக்கிற திருமுடிகளை எழுவானங்களிலுமுள்ள மலாயிக்கத்துமார்கள் கூட்டங் கூட்டமாக இறங்கி மனமகிழ்ச்சியுடனே முன்னர் நெஞ்சுக்கு நேருயர்த்தி ஆண்டவனிடத்திற் துஆக் கேட்குங் கை

களைக்கொண்டு நெருங்கி உனக்கு முந்தினது எனக்கு முந்தினதென்று முட்டிமோதி நெக்கிவிழுந்து அம் முடிகளைப் பொறுக்கினார்கள். அப்படி அவர்கள் முடிகளைப் பொறுக்குந் தன்மை எவ்வித மிருந்ததெனில்.

மலைகளுருளுவதுபோலும், கடல்வெள்ளம் புரளுவதுபோலும், காற்றுக்கடுவல் பிசல் மோதுவதுமாக விழுந்து விழுந்து பொறுக்கினார்கள். அப்படிப் பொறுக்கும் முடிகளைக்கொண்டுபோய் அல்லாஹு சுபுஹான ஹுத்தஆலா அருளினால் ஒவ்வோர் முடிகளை எழுபதினாயிரம் மலாயிக்கத்துகள் உவந்து பங்காக எடுத்துக்கொண்டார்கள். இன்னும் சில மலக்குகளுடைய ஆசை நிறைவேறுவதற்கு அம்முடிகள் கிடைக்காமற் கைசேதப்பட்டு நின்று தவித்தவர்களாகப்போய் முன்னர் முடிகிடைத்த முடிகளில்நின்றும் பங்கு பெற்றுக்கொண்டு அம்முடிகளை யாவரும் இலாஞ்சனையாக தரித்துக்கொண்டு தஸ்பீஹுசெய்து அல்லாஹுத் தஆலாவைப் புகழ்ந்து நபிநாயகத்தை வாழ்த்தி சுபசோபனங் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள்.

இவ்விதம் நடக்கும்போது நம்மாண்டகை நபி முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய தோழன்மார்களாகிய காற்பத்திராயிரம் அசுஹாபிமார்களும் கலந்து நபிநாயகத்தைக் கண்டு அஸ்லாமு அலைக்கும். யாறசூலுல்லாவென்று சலாஞ்சொல்லி அவர்களைப் போற்றிப்புகழ்ந்து யா இமாமல் முறுசலீனே எங்களுக்கு உங்களுடைய திருச்சிரோருகத்தில் நின்றும் கிஞ்சிதமேனுங் கிடைக்கவேணுமென்று கேட்டார்கள். அதுகேட்டு நபிநாயகம் மிகுந்த மகிழ்ச்சியாகி வானவர்கள் கொண்டுபோன முடிகள்போக மீதியிருந்த ஒரு முடியையு மெடுத்து அவ்வசுஹாபிமார்கள் அனைவரையும் பார்த்து வானவர்கள் முந்தினபடியால் அவர்கள் முழுமையுங் கொண்டுபோய் விட்டார்கள். அதில்நின்றும் மீந்த முடியொன்றுதா னுள்ளதென்றுசொல்லி இந்த ஒரு முடியையும் நீங்களனைவோரு மனமொற்றுமையாக வைத்துக் கொள்ளுங்களென்று கொடுத்தார்கள்.

இவ்விதம் காத்திமல் முறுசலீன் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள்

கொடுத்த முடியை அவ்வசுஹாபிமார்கள் வாங்கிக் கொண்டு யாவர்களும் மனமொத்து ஓரிடத்தில் வைத்து மகிழ்ச்சிகொண்டு ஆனந்தக்கடலிற் குளித் தவர்களாகிச் சந்தோஷ முற்றிருந்தார்கள்.

இப்படியாக இருக்கும்போது இஸ்மாயீலிபுனு அப்துற்றஹ்மானென்னும் பெயருடைய அஸ்ஹாபி யானவர் அல்லாஹு ஸுபுஹானஹுத் தஆலாவின் கலாவின் கற்பனைப்பிரகாரம் மவுத்தாய்போய் இருப் பவர்களால் மார்க்கப்பிரகாரம் சிறப்பாக அடங்கப் பட்டார். அப்படியவர் கபுறில் அடங்கப்பட்ட போது அங்கே முன்கற் கற்கீரென்னு மிரண்டு மலக் குகளும் வந்து வழமைப்படி இஸ்மாயீலிடத்திற் கேள்வி கணக்குங் கேட்டார்கள். அப்போதவர் அவ் விரண்டு மலக்குகளிடத்திலும் வள்ளலாகிய முஹம் மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய திருமுடி யடையாளத்தைக் காண்பிவித்தார். அது கண்டு அம்மலக்குகள் இஸ்மாயீல் அஸ்ஹாபியவர்க ளிடத்தில் ஓய், இஸ்மாயீலே, உம்மிடத்திற்கேட்ட கேள்விக்கு மறு ஜவாபு சொல்லும். இப்பேர்ப்பட்ட அடையாள முதலானதுகளைக்கொண்டு எங்களுக்குக்

காரியமில்லையென்று கோபங்கொண்டு வண்டுருக்கிக் கடினமான சப்தத்துடனே கேள்வி கேட்டார்கள்.

அப்போது இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலா மவர்கள் நபிநாயகத்துடைய திருமுடியிறக்கின ஹதீதை யோதினர். அப்போதவ்விரண்டு மலக்குகளும் இஸ்மாயீலவர்களைக் கோபித்து நீரென் கேள்விக்குத் தகுந்த மறுமொழி கொடாமற் பலவாறு தன்மொழிகளைப் பேசுகிறீரே, ஆண்டவனெங்களுக்கு இம்மொழிகளெல்லாங் கேட்கக் கட்டளையிடவில்லை. ஆதலால், எங்கள் கேள்விக்குத்தரவு கொடுமென்று கோடையிடி குமுறுவதுபோலே சப்தித்து சுக்குமாந்தடியைக்கொண்டு யோங்கியடிக்க நெருங்கினர்கள்

அப்போது அல்லாஹு ஸுபுஹானஹுத்தஆலா இடத்தில் நின்றுமோர் சத்தமானது ஆய் முன்கற் நக்கீரென்னும் மலக்குகளே என்னுடைய ஹபீபாகிய முஹம்மது நபியுடைய திருமுடியிறக்கின அடையாளத்தோடு வந்திருக்கிற என்னடியான் இஸ்

மாயிலைக் கடினமான கேள்விகள் கேளாமல் லேசா கக் கேளுங்களென்று உத்திரவாச்சுது.

அப்போது அவ்விரண்டு மலக்குகளும் இந்த இஸ்மாயில் அல்லாஹூ சுபுஹானஹூத் தஆலாவு டைய சிபாரிசுடையவரா யிருக்கிறாரென்று மிகுந்த ஆச்சரியமுற்று அவரிடத்தில் இலேசாகக் கேள்வி கேட்டு நல்லடியானென்று மீசானிலெழுதித் தலை மாட்டி லூன்றிவிட்டுப் போய்விட்டார்கள். இவ்வி தம் இஸ்மாயில் அஸ்ஹாபியவர்களுக்கு கபுறில் நடந்த சங்கதிகளை அவர்களுடைய உஸ்தாது செய் யிதி அஹமதுமக்கி என்பவர்கள் அவர் மவுத்தாயின மூன்றாம்நாள் கனவிலே அவரைக்கண்டு கபுறிலே உமக்கு நடந்த காரண மென்னவென்று கேட்ட போது உஸ்தாதுக்கு அவர்மிகுந்த அதபு மரி யாதையுடனே தஃலீம்செய்து தமக்குக் கபுறில் நடந்த சங்கதிகளைச்சொல்ல அதை உஸ்தாதவர்கள் கேட்டு அன்று காலையில் சுபுஹூ தொழுதுவிட்டுத் தங்களுடைய முரிதீன்களுக்கெல்லாம் யிஸ்மாயில் அஸ்ஹாபிக்குக் கபுறில் நடந்ததாக அவரென் கன விற் சொன்னாரென்று சொன்னார்கள்.

இவ்விதம் நமதுநாயகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுக்குத் திருமுடியிறக்கின ஹதீதைத் திட்டவட்டமாக எழுதிக் கோர்வையாக்கிய இமாம் முஹம்மதென்னும் மசுஹாபியவர்கள் , ஒரு வெள்ளிக்கிழமை இரவில் நமது கோர்வையாகிய நபிநாயகத்திற்குத் திருமுடியிறக்கின இந்த ஹதீதை ஒளுவுடனே ரொம்பவுந் துசிகரமாக இருந்துகொண்டு உருக்கமாகப்படித்து முடித்து நபிநாயகத்தின்பேரில் சலவாத்து முதலிய தறாதுகளுமோதி அல்லாஹுத் தஆலாவிடத்தில் ஈமானுக்குந் துஆக் கேட்டுக்கொண்டு படுத்து நித்திரை செய்யும்போது அண்ட சராசரங்களெல்லாம் அல்லாஹுத் தஆலா படைக்க முதலில் தனது நூறினாற் படைத்த முஹம்மது முஸ்தபா றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களும் நான்கியார்களும் நாற்பத்தீராயிர மசுஹாபிமார்களுங் கூட்டமான இவர்கள் வீட்டினிடமாக வந்து ஹாஸிறுகினபோது நபிநாயகம் தங்கள் கற்பூரவாடை கமழும் பொற்பான திருவாயைத் திறந்து ஓய் இமாம் முஹம்மதேயென்று அருமையாகக் கூப்பிட்டார்கள். அப்போது இமாம் முஹம்மதவர்கள் நித்திரையிற்றுனே பயங்கரத்துட

னே எங்களுக்கெல்லாம் நாயகபதியான நபீ முஹம்மதே! ஏழையாகிய நான் ஆஜராகினேன் (லப்பைக்கும்) என்று ஜவாபுகொடுத்தார்கள்.

அப்போது துப்புரவாகிய றப்பில் ஆலமீன் தூதாங்கர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் அந்த இமாம் முஹம்மதவர்களைப் பார்த்து ஓ் இமாம்முஹம்மதே நீர் எனக்குத் திருமுடியிறக்கின ஹதீதைக் கோர்வைசெய்து என்னுடைய உம்மத்தோர்கள் யாவர்களும் தெரியச்செய்தபடியினாலே அல்லாஹு ஸுபுஹானஹுத் தஆலா உமதுபேரில் மிகவுங் கிருபையாய் நீர்செய்த பாவங்களையும் உம்முடைய தாய் தகப்பன்மார்கள் செய்த பாவங்களையும் பொறுத்துத் தீமையெழுதிய பட்டோலையையுங் கிழித்துப்போட்டு நன்மையெழுதிய பட்டோலையைத் துலங்கச்செய்து சுவர்க்கலோகத்தை நன்கொடையாகக் கொடுத்தருளினா னென்று திருவுளமானார்கள்.

இன்னும் அல்லாஹுத்தஆலா முஹம்மது ஸல்லல் லாஹுஅலைஹிவஸல் மவர்களுக்குத் திருவுள

மானன். எனக்கருமையாகிய முஹம்மதே! உம்முடைய திருமுடியிறக்கிய ஹதீதை யாதாமொருவன் பயபக்தியுடனே துப்புரவாக எழுதிப்பேணி வைத்துக்கொண்டு வெள்ளிக்கிழமை, திங்கட்கிழமை இரவுகளில் வாசனைக் காண்பிவித்து உலுவுடனே மஹப்பத்தாகி வளமையாகப்படித்து வருவானாகில் அவனுக்கும் அதை யோதும்படி செய்வித்துக் கேட்டிருந்தவர்களுக்கும் ஓதும்போது சலவாத்துச் சொன்னவர்களுக்கும் துனியாவிற் சிலகாரியங்களை வெளியாக்கி வைப்பேன்.

அந்தக்காரியங்களில் முதலாவது அவர்கள் செய்தபாவங்களைப் பொறுத்துப் பாவமெழுதிய பட்டோலையையுங் கிழிப்பேன். இரண்டாவது அவர்களுக்குயாரெனும் துனியாவில் வஞ்சனை சூனியஞ் செய்துகொண்டு பகைத்திருந்தாலும் அவைகளை விலக்கிப்போடுவேன், இன்னுந்தீராத கொடூரமான பகைஞரிருந்தாலும் அந்தப் பகைஞரை நினைத்து வெள்ளிக்கிழமை இரவு கபுறுஸ்தானுக்குப்போய் இரண்டு கபுறுக்கிடையி லிருந்துகொண்டு நபிநாயகத்திற்குத் திருமுடியிறக்கிய இந்த ஹதீதைப் படித்து இதற்காக

அல்லாஹு தஆலா குறுஆனையத்திலிறக்கின துஆ ஒன்றிருக்கிறது. அதைப் பின்னாலே தனித்துச் சொல்லப்படும். அந்தத் துஆவை ஓதிப் பின்னர் யாசீன் சூராவையுமோதிப் பூமியிலூதி அந்த மண்ணை யள்ளிக்கொண்டுவந்து அந்தப் பகைஞருடைய வீட்டின்பேரிலெறிந்தால் உடனே அப்பகைஞர்களுக்குப் பலாயைவிட்டு என் றஹ்மத்தை அவர்களைவிட்டுந் தூராக்கிவிடுவேன். அதனோடும் என் ஹபீபாகிய முஹம்மதே உம்முடைய ஷபாஅத்தைவிட்டு மவர்களைத் தூராக்குவே னென்றுந் திருவுளமானான்.

இன்னும் அல்லாஹு சுபுஹானஹு தஆலா திருவுளமானான். முஹம்மதே! உம்முடைய திருமுடியிறக்கிய வரிசையான ஹதீதை யாதாமொரு அடியான் பயபக்தியுடனே எழுதிப் பேணுதலாக நேசித்து ஓதி வரும்போதவன் மவுத்தாகிப் போனானாகில் அவனுக்கு ஐந்து காரியத்தின்பேரிற் கிருபை செய்வேன். அந்தக்காரியங்களில் 1-வது அவனடங்கிய கபுறில் எட்டு சுவர்க்கத்து வாயிலையுந் திறந்து காட்டிவைப்பேன். 2-வது அவனுக்கு எழு

நகரத்தையும் ஹறுமாக்கி வைப்பேன். 3-வது மகுஷர் வெளியுடையஅவஸ்தையை நீக்கிவைப்பேன். 4-வது சிறுத்தல் முஸ்தகிமென்கிற பாலத்தை இலேசாகக் கடக்கச்செய்வேன். 5-வது என்னுடைய றஹ்மத்திலும் உம்முடைய ஷபாஅத்திலும் சேர்த்து வைப்பேன் என்றுந் திருவுளமானன்.

இன்னும் அல்லாஹு சுபுஹானஹுத் தஆலா திருவுளமானன். என்னருமையான மஜ்லீசில் தாவூசான முஹம்மதே! உம்முடைய திருமுடியிறக்கின ஹதீதை யாதாமொரு அடியான் வெள்ளிக்கிழமை, ஆகியஇவ்விரவுகளில் வாசனையிட்டு உலுவுடனே கப்புரவாயிருந்து வளமையாகப்படித்து சலவாத்துஞ் சொல்லி வருவானகில் அவனுக்கு உம்மோடுவந்து 40-ஹஜ்ஜு செய்த தவாபும் 1000-அடிமையை உரிமைவிட்ட தவாபும் என்னைநாடி ஏழையெளியோர்களெங்கேயென்று தேடி அவர்களுக்கு அன்பு மரியாதையுடனே 1000-தங்கக்காசு ஸதக்காக்கொடுத்த தவாபுங்கொடுப்பேன் என்றுந் திருவுளமானன்.

இன்னும் அல்லாஹுத் தஆலா திருவுளமா னுன். என்னுடைய உள்ளமையை யுற்றுணர்ந்து கனி வாககாணும் முஹம்மதே! உம்முடைய திருமுடியிற க்கிய ஹதீதை யாதாமொரு அடியான் மனம் உவப் புடன்எழுதிப் பேணுதலாகத் தலையின்பேரில் வைத் துக்கொண்டு தனிவழிபோகச் சம்பவித்தால் அவ னேடு 70,000 மலக்குகளைக் காவலாகப் போகும் படி செய்வேனென்றுந் திருவுளமானுன்.

இன்னும் அல்லாஹு சுபுஹானஹுத் தஆ லா திருவுளமானுன். எனக்கன்புள்ள தூதாங்கரான முஹம்மதே! உம்முடைய திருமுடியிரக்கிய ஹதீதை யாதாமொரு அடியான் வரிசையாக எழுதிப் பே ணிப் படித்துவருவானுகில் அவனுக்கும் படிப்பதைக் கேட்டு உமதுபேரில் சலவாத்துச் சொன்னபேர்க ளுக்கும் படிக்கச்செய்து கேட்டிருந்தபேர்களுக்கும் ஜிபுரீல், மீக்காயீல், இசுருபீல், இஸ்ருயீல், ஆகிய இந்நான்கு பேர்களுடனும் தவருமல்நின்று தொழுத தவாபுபோலுள்ள தவாபைக் கொடுப்பதுடனே

ஜின், ஷைத்தான்களுடைய கலைவிதங்களை விட்டுங் காத்துகொள்வேனென்றுந் திருவுளமானுன்.

இன்னும் அல்லாஹுத் தஆலா திருவுளமானுன். முஹம்மதே! உம்முடைய திருமுடியிறக்கிய வரிசையான ஹதீதை யாதாமொரு அடியான் பேதகமாகஎண்ணினாலும், அதை வைத்துக்கொண்டு ஓதாமலிருந்தாலும் சல்வாத்துச் சொல்லாமலிருந்தாலும் அவன் நாளை மகுஷரில் இபுலீசு லஃனத்தையுடைய கூட்டத்திலாகும்படி செய்வதுடனே சிறுத்தல் முஸ்தகீமென்னும் பாலத்தையுங் கடக்காமலாக்குவேன். உம்முடைய திருமணக் காட்சியுங்காண இடங் கொடுக்க மாட்டேனென்றுந் திருவுளமானுன்.

இன்னும் அல்லாஹு சுபுஹானஹுத் தஆலா திருவுளமானுன். முஹம்மதே! உம்முடைய திருமுடியிறக்கின ஹதீதை யாதாமொரு அடியான் வரிசையாகப்படித்து வருவானுகில் அவனுக்குத் தவுறுத்து, சபூர், இன்ஜீல், புறுக்கான் ஆகிய இன்னுன்கு வேதங்களையும் ஒப்பில்லாமலோதி ஹதியாச்செய்த தவாபைக்கொடுப்பேனென்றுந் திருவுளமானுன்.

இந்த ஹதீதின் சிறப்புகளேயும், வரிசைகளேயும், மேலாம்பரத்தையும் நன்ருய்யுத்துணர்ந் தாராய்ந்து பயபக்தியுடனே கோர்வைசெய்த இமாம் முஹம்ம தென்பவர்கள் இந்த ஹதீதைப் படித்தரங்கேற்றும் போது ஒட்டகை 100, மாடு 100, ஆடு 100, குருபா ஞகஅறுத்து அன்னஞ் சமைத்து, அனேகர்களுக்கு விருந்து கொடுத்து, ஏழை யெளியோர்களுக்கு வஸ் திர முதலிய பணங்காசுகளும் தான தர்மஞ்செய்து சிறப்பித்தார்கள்.

அதனுலே அந்த இமாம் முஹம்மதவர்கள் நபி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல் லமவர்களைக் கனவிற் றெரிசித்தார்கள். அப்போது நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல் லமவர்களுடைய திருக்கையினுல் அவருடைய சிரத் தைத் தடவி அக்கைகளே யேந்தி அல்லாஹுத் தஆ லாவைப் புகழ்ந்து போற்றி இந்த இமாம் முஹம்மது அசுஹாபிக்கும்இவருடைய தாய் தகப்பன்மார்களுக் கும், கிளேஞர்கள் யாவருக்கும் பெண்டு பிள்ளேகளுக் கும் தோழன்மார்களுக்கும் இதை யுணர்ந்தவர்கள் யாவருக்கும் இம்மை மறுமையி லீடேற்றமும் வாழ்

வும் பறக்கத்தும் சகல நன்மைகளுங் கொடுத்தருள் வாயென்று துஆக்கேட்டார்கள்.

இவ்விதம் நமது நாயகம் நபிமுஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் கேட்ட துஆவை அல்லாஹு சுபுஹானஹுத் தஆலா கபூலாக்கிக் கொடுத்தான். அதுபோல அந்த இமாம் முஹம்மதென்னும் அசுஹாபியானவர் மிகவும் பெருந்தன்மையுடையவராகியும், உலகத்தில் வாழ்நாள்களெல்லாம் மகா மேலாம்பரத்தை யுடையவராகியும். இராஜாதி ராஜசபைகளுக்கும், வித்தியாடம்பர விநோத சம்பூரணராகியும், நன்ருய்விளங்கியிருந்து மஃரிபாவென்னும் ஞானேதய தீபீகராக வாழ்ந்து முடிவில் மோட்சகதியையும் பெற்றுர்.

ஆதலால், எமது பிறவியர்களான மூமீன் முஸ்லீமானவர்களே! இவ்விதம் வரிசையும் பேறுமுள்ள இந்த ஹதீதை யுவந்து முஹப்பத்தாகி இதனுடைய துஆவைத் தெரிந்தவர்களால் அறபு லிகிதத்தாலெழுதியேனும், அல்லது முகபாடமாக்கியேனும் புகர் முதலிய வாசனையிட்டுப் படித்துவருவதுடனே றசூல் நாயகம்பேரில் சலவாத்தும் சொல்லி அல்லாஹுத்

தஆலாநமது புறுக்கான் வேதத்தில் ஏவியிருக்கிறபடி நாளொன்றிற்கு ஐந்து விடுத்தம் பதினேழு றக்ஆத்துந் தவரவிடாமற் றொழுதுக்கொண்டு சக்காத்து கைறு, கைருத்துங் கொடுத்துக்கொண்டு நேராக நடந்து ஷறகைப்பேணி ஆலிம்க ளுலமாக்கள் வித்துவான்களையும் மரியாதித்து வருவீர்களாகில் அல்லாஹுத்தஆலா உங்களுக்குச் சக்கறுத்து ஹாலையும் மருஷரின் வேதனையையும் இலேசாக்கித்தந்து அவனுடைய தீதாறுந் தெரியவந்து அவனுடைய முஹப்பத்திலாக்கிச் சுவர்க்கப்பதிவாழ்வையும் தனதாக்கித் தந்து அவ்விடத்திய நிஃமத்துகளையும் நீங்காது அநுபோகிக்க வைப்பானாக.

ஆமீன் ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

நபிநாயகத்துக்குத் திருமுடியிறக்கின ஹதீது

முற்றிற்று.